<u>**உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்.**</u>

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**உதவி அமர்வு நீதிபதி / சார்பு நீதிபதி,**
<u>**துறையூர்.**</u>

# <u>SC.No.139/2023</u>

2025ம் ஆண்டு ஜூலை திங்கள் 17ம் நாள் சாட்சியாகிய <u>அ.சா.9</u> வது நபரின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.கிருஷ்ணன், இருக்கை எழுத்தர் நிலை-2 என்பவரால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரகாஷ் | த/பெ | : | |
| | | | க/பெ | : | |
| வயது | : | | ஊர் | : | |
| தொழில் | : | | அலைபேசி எண் | : | |
| தேதி | : | 17.07.2025 | முகவரி | : | |

<u>**எதிரி ஆஜர்.**</u>
<u>**சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:**</u>

1. நான் தற்போது மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 2022ம் ஆண்டு உப்பிலியபுரம் காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது 04.07.2022ம் தேதி திருச்சி அட்லஸ் மருத்துவமனையில் உள்ள தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த ராதிகா வயது 31 க/பெ. செல்லதுரை சித்தூர் தென்புறநாடு ஆகியோரிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தில் பெயரில் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.175/2022 என 341, 294பி, 323, 326, 307 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அது **அ.சா.ஆ.6**. பின்பு புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வழக்கு கோப்பினை வைத்தேன்.

__குறுக்கு விசாரணை__

1. வழக்கு சம்பவம் 04.07.2022 காலை 09.00 மணிக்கு நடைபெற்றது. சம்பவத்திற்கு பிறகு ராதிகா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் துறையூர் சீனிவாசன் மருத்துவமனையில் இருந்து 11.00 மணிக்கு தகவல் கிடைத்தது. அதன் பிறகு ராதிகாவை மேல் சிகிச்சைக்காக திருச்சி, அட்லஸ் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். எனக்கு திருச்சி அட்லஸ் மருத்துவமனையில் இருந்து பகல் 02.00 மணிக்கு தகவல் கிடைத்து நான் 04.00 மணிக்கு சென்று வாக்குமூலம் பதிவு செய்தேன். திருச்சி அட்லஸ் மருத்துவமனையில் 02.00 மணிக்கு தகவல் வந்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அட்லஸ் மருத்துவமனையில் ராதிகா சிகிச்சைக்கு சேர்ந்தது 02.15 என குறிப்பிடப்பட்டுள்ளது. புகார்தாரர் ராதிகா வாக்குமூலம் கொடுக்கும்போது நல்ல நிலைமையில் இருந்தார் என்றால் சரிதான். நான் போகும்போது புகார்தாரருக்கு அறுவைசிகிச்சை முடியவில்லை. புகார் வாக்குமூலம் எப்படி பதிவு செய்யப்பட்டது என்றால் அவர் கூறினார் நான் பதிவு செய்தேன். புகார் வாக்குமூலம் கொடுக்கும் புகார்தாரர் கையொப்பம் செய்தார். புகார்தாரர் கையொப்பம் செய்த புகார் வாக்குமூலம் தான் உண்மையான வாக்குமூலம் என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரில் புகார்தாரரின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் பெற்றுகொண்டு எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால் இரவு 08.00 மணிக்கு சென்றேன். புகார்தாரர் கொடுத்த தகவலின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையில் எதிரி புகார்தாரரிடம் தவறாக நடந்து கொண்டதாகவும்,அதனை புகார்தாரர் எதிரியின் மகனிடம் கூறியதாகவும், அதற்கு எதிரியின் மகன் எதிரியை கண்டித்ததாகவும் புகாரில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இது சம்மந்தமாக எதிரியை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு சம்பவ இடத்திற்கு ஆய்வாளருடன்

சென்றேனா என்றால் சரிதான். சம்பவ இடத்தில் ரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டதா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. சம்பவ இடத்தில் சாட்சிகளை ஆய்வாளர் விசாரிக்கும்போது உடன் இருந்தேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை 14 காலத்தில் புகார்தாரர் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். 15 காலத்தில் நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பொய்யான தகவலின் அடிப்படையில் எவ்வித விசாரணையும் செய்யாமல் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஒம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்